**அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 173**

எனது இல.2/9/771(எச்)
அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு-7.
1980, யூலை மாதம் 31ஆந் தேதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
அரசாங்க யாக்கத் தலைவர்கள் யாவர்க்கும்,

வேலை நிறுத்தம்-- 1980, யூலை மாதம்-
பதவியை விட்டு நீங்கல்.

முறையே 1980, யூலை மாதம் 22ஆம் தேதியும், 1980, யூலை மாதம் 24ஆந் தேதியுமிடப்பட்ட 168ஆம், 170ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளைப் பார்க்க.

02. 1980.07.18ஆந் தேதியன்றோ அதற்குப் பின்னரோ பணியாற்றச் சமுகமளிக்கத் தாம் தவறியமை காரணமாகப் பதவியை விட்டு நீங்கியவரான அரசாங்க உத்தியோகத்தர் அல்லது யாக்கமொன்றின் பணியாளர் எவரும் கடமையை மீளவேற்க அனுமதிக்கப்படுதலாகாதென இப்பொழுது முடிவு செய்யப்பட்டுள்ளது.

03. மீளப் பணிக்கமர்த்துமாறு கோரி அத்தகைய உத்தியோகத்தர்கள் செய்யும் மேன்முறையீடுகள் யாவும், அவை பற்றி முடிபு செய்யப்படுவதற்காக அமைச்சரவையின் உறுப்பினராக விளங்கும் இயைபுள்ள அமைச்சருக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

04. கடமையாற்ற தாம் வராதிருந்தமைக்கு ஏதுவாக நியாயமான காரணம் இருந்தது என்பது பற்றி அமைச்சரவையின் உறுப்பினராக விளங்குமியைபுள்ள அமைச்சரைத் திருப்திப்படுத்திய உத்தியோகத்தர்கள் எத்தேதி தொடக்கம் மீளப் பணிக்கமர்த்தப்பட வேண்டும் என்பது பற்றி அமைச்சரவை முடிவு செய்யும்.

05. 168ஆம், 170ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளின் படி கடமைகளை மீளவேற்க அனுமதிக்கப் பெற்றுள்ள உத்தியோகத்தர்களின் விடயங்களும் மீளநோக்கப்படுவதற்காக அவை அமைச்சரவையின் உறுப்பினராக விளங்கும் இயைபுள்ள அமைச்சருக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

ஒப்பமிட்டவர்: பி. ஐ. குணதுங்க.
பதிற் செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.

கிசி/